# தமிழ்

# ழகரம்

## முதல் பருவம்

## விடைகள்

# பாடம் – 1

## 1.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) விடை காண்போம். (பக்கம் எண்: 5)**

1. ஷெல்லியும் பாரதியும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றம் குறித்துச் சிந்தித்தனர். இவர்கள் மக்களிடத்தில் ஏழைகளின் நண்பர்களாகவே அறிமுகம் செய்துகொண்டனர். அனைத்து மக்களையும் சமமாக மதிக்க வேண்டும். அனைவரும் சமமாக வாழ வேண்டும். அனைவருக்கும் அனைத்து வளங்களும் உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்று இவ்விரு கவிஞர்களும் சமத்துவப்பண்பு குறித்துத் தம் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

2. ஷெல்லி, சுதந்திரத்தின் பாட்டு (Ode to liberty), அராஜகத்தின் முகமூடி ( The mask of Anarchy/ The Masque of Anarchy), மேல்காற்று (Ode to a west wind), இங்கிலாந்து மக்களுக்கான பாட்டு (Songs to the men of England) போன்ற பல கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

3. பாரதி, பாப்பா பாட்டு, குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

4. பாரதியார், ஆங்கிலக் கவிஞரான ஷெல்லியின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டிருந்தார். இவர், ஷெல்லிதாசன் என்று ஒரு புனைபெயரைச் சூடி, ஷெல்லியின் பெயரில் சங்கம் ஒன்றை நிறுவி ஷெல்லியின் மீது வைத்திருந்த தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்.

5. பாரதியும் ஷெல்லியும் நாடு, மொழி, பண்பாடு முதலியவற்றால் வேறுபட்டவர்கள். ஆயினும், மனித நேயம், பெண் விடுதலை போன்ற சமுதாய முன்னேற்றச் சிந்தனைகளில் கருத்து ஒற்றுமை உடையவர்களாக இருந்துள்ளனர்.

**(ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 5)**

1. தவறு
2. சரி
3. தவறு
4. சரி

**(இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 5)**

1. எட்டயபுர மன்னர்
2. ஷெல்லிதாசன்
3. பாரதியார்
4. ஷெல்லி

**(ஈ) எதிர்ச்சொல்லைச் சரியாகப் பொருத்துக. (பக்கம் எண்: 5)**

1. நன்மை x தீமை
2. ஒற்றுமை x வேற்றுமை
3. உயர்வு x தாழ்வு
4. வெறுத்தனர் x விரும்பினர்
5. எதிர்த்தனர் x உடன்பட்டனர்

## 1.3 தெரிந்துகொள்வோம்

**பயிற்சிகள்**

**(அ) கீழ்க்காணும் படங்களைப் பார்த்துப் பெயரெச்சத் தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 8)**

1. பறக்கும் பறவை
2. பாடுகின்ற சிறுமி
3. பறையடிக்கின்ற கலைஞன்
4. உடைந்த ஓடு
5. ஓடுகின்ற குதிரை
6. நீந்தும் சிறுவன்
7. விளையாடுகின்ற சிறுவன்
8. ஓடுகின்ற பெண்
9. தாவும் குரங்கு

**(ஆ) பொருத்துக.**

1. பூக்கும் – மலர்கள்
2. வரைந்த – ஓவியம்
3. பறந்த – பறவை
4. அழைத்த – ஆசிரியர்

## 1.4 மொழியோடு விளையாடுவோம். (பக்கம் எண்: 9)

| மேலிருந்து கீழ்: | இடமிருந்து வலம்: |
|---|---|
| 1. குழந்தை<br>5. சக்கரம்<br>6. சிங்கம் | 2. தங்கம்<br>3. பந்து<br>7. காளை<br>10. மாம்பழம் |
| **கீழிருந்து மேல்:** | **வலமிருந்து இடம்:** |
| 2. தலை<br>4. அம்பு<br>9. கடிகாரம் | 1. குயில்<br>5. சங்கு<br>8. காகம் |

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 10)

1. பாரதியாருக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது.
2. மாபெரும் கவிதைப்போட்டி
3. கவிதைகள் எழுத்து வடிவிலோ அல்லது தட்டச்சு வடிவிலோ அமைய வேண்டும்.
4. 01.12.2023
5. ரூ.15,000

## 1.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 11)

1. சபர்மதி
2. நேரம் கடந்து வந்த காந்திஜி பொறுமையாகக் கதவுகளுக்குப் பின் காத்திருந்தார்.
3. காந்திஜி, ஆசிரமத்தின் விதிமுறைகள் எல்லோருக்கும் பொருந்தும். எல்லாரையும் போல நானும் அவற்றைப் பின்பற்ற வேண்டும். இன்று எனக்காக விதிமுறைகளைத் தளர்த்தினால், நாளை மற்றவர்களுக்காவும் தளர்த்த வேண்டியிருக்கும் என்றார்.
4. காந்திஜி
5. நேரத்தைப் பின்பற்றாவிட்டால் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படும். எனவே நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

## 1.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்:12)

1. **தோழர்** – நான் என் **தோழர்**களுடன் சேர்ந்து விளையாடினேன்.
2. **நூல்கள்** – என் பள்ளியில் உள்ள நூலகத்தில் பல **நூல்கள்** உள்ளன.
3. **நற்பண்பாளர்** – நான் **நற்பண்பாளர்**களிடமிருந்து நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டேன்.
4. **விதிமுறைகள்** – சாலை **விதிமுறைகளை** மதிக்க வேண்டும்.

## 1.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்:12)

கவிதை என்பது உலகெங்கிலும் உள்ள கலாச்சாரங்களில் நிலவும் ஒரு படைப்பு எழுத்து வடிவமாகும். இது மொழியின் அழகியலில் கவனம் செலுத்துகிறது.

## 1.10 படைப்பாற்றல் வளர்ப்போம் (பக்கம் எண்:13)

### குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தி, இயற்கைக் காட்சிகளை வருணித்து ஆறு தொடர் எழுதுக.

1. மலையடிவாரத்தில் அழகான வீடு.
2. அவ்வீட்டின் அருகில் பசு மேய்ந்து கொண்டிருந்தது.
3. தோட்டத்தில் வண்ண வண்ண மலர்கள் அழகாகப் பூத்திருந்தன.
4. வானில் பறவைகள் கூட்டம் கூட்டமாக உலா சென்றன.
5. மான்களும் முயல்களும் துள்ளிக் குறித்து ஓடும்.
6. பரந்து விரிந்த மரக்கிளைகளில் குரங்குகள் விளையாடின.

## 11. உயர்நிலைத்திறன்

### குறிப்புகளைக் கொண்டு, கதை எழுதுக. (பக்கம் எண்:13)

மைதானத்தில் சிறுவர்கள் ஒன்றாகப் பந்து விளையாட்டு விளையாடினர். அப்பொழுது அந்த பந்தானது ஒரு குழியில் விழுந்து விட்டது. அனைத்து சிறுவர்களும் அவர்களுக்கு தோன்றிய சிந்தனையில் அந்தப் பந்தை எடுக்க முயற்சி செய்துக் கொண்டிருந்தனர். அதில் ஒரு சிறுவன் மட்டும் வாளியில் தண்ணீரை எடுத்து வந்து குழியில் ஊற்றினான். அந்தப் பந்து கொஞ்சம் கொஞ்சமாக மேலே மிதந்து வந்தது. இவ்வாறு, பந்து மேலே வரும் வரை குழிக்குள் தண்ணீரை ஊற்றி, அந்தப் பந்தை எடுத்தனர். அனைத்து சிறுவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அச்சிறுவனைப் பாராட்டினர். பின், அனைவரும் கூடி ஒன்றாக விளையாடினர்.

# பாடம் – 2

## 2.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 17)

1. எல்லோரிடமும் எதையாவது விசாரித்துக் கொண்டிருப்பது பெரியசாமி தாத்தாவின் இயல்பு ஆகும்.

2. கே. பாலமுருகன்

3. விசாரிப்பு என்பதன் பொருள் 'ஒருவரைப் பற்றிக் கேட்டறிதல்' என்பதாகும்.

4. நம் மீது உண்மையான அக்கறை கொண்டு, விசாரிப்பவர்களை நாம் புறக்கணிக்கக் கூடாது.

5. அடுத்த வீட்டு பெரியசாமி தாத்தா எப்போதும் முனுசாமி வீட்டிலிருந்து வெளியேறும் எல்லாரிடமும் எதையாவது விசாரித்துக் கொண்டிருப்பார். இதனால் முனுசாமி பெரும் பாதிப்புக்கு உள்ளானார். ஒரு நாள் பெரியசாமி தாத்தா வீட்டை விட்டு வெளியே வர இல்லை. முனுசாமியின் மகன், தாத்தா இறந்துவிட்டாரா என்று நினைத்தான். அவன் நெஞ்சுவலி காரணமாக மருத்துவமனையில் உள்ள தந்தையைப் பார்த்துவிட்டு வீடு திரும்பினான். காலையிலிருந்து முனுசாமியை பார்க்க வேண்டும் என்று வழியில் நின்று கொண்டிருந்த தாத்தா அவன் மகனைப் பார்த்தவுடன் 'உங்க அப்பா எப்படி இருக்கான்' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு விசாரிக்க ஆரம்பித்தார்.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 17)

1. விசாரிப்பு
2. அப்பா
3. பின்வாசல்
4. வேலி
5. அக்கறை

### இ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 17)

1. சரி
2. தவறு
3. தவறு
4. தவறு
5. சரி

## 2.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

**(அ) பொருத்துக. (பக்கம் எண்: 19)**

1. தாளம் போடுதல் – துன்பப்படுதல்
2. அகலக் கால் வைத்தல் – சிந்திக்காமல் செயல்படுதல்
3. இறக்கை கட்டிப் பறத்தல் – மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல்

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களில் மரபுத்தொடரைக் கோடிட்டுக்காட்டுக. (பக்கம் எண்: 19)**

1. அகலக்கால் வைத்ததை
2. தாளம் போடுகிறான்.
3. இறக்கை கட்டிப் பறந்தாள்.

**(இ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான மரபுத்தொடரை இட்டு நிரப்புக. (பக்கம் எண்: 19)**

1. அகலக்கால் வைத்து (சிந்திக்காமல் செயல்பட்டதால்)
2. இறக்கை கட்டிப் பறந்தனர். (மகிழ்ச்சியாக இருந்தனர்)
3. தாளம் போடுகிறான். (துன்பப்படுகிறான்)

## 2.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக. எல்லாச் சொல்லின் இறுதி எழுத்தும் 'கம்' என முடிய வேண்டும். (பக்கம் எண்: 19)**

1. வணக்கம்
2. பழக்கம்
3. நடுக்கம்
4. அரங்கம்
5. ஒழுக்கம்

## 2.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 21)**

1. முனியப்பன் வசதி படைத்தவன். அவனிடம் செல்வம் மிகுந்திருந்தாலும், பிறருக்குக் கொடுக்க மனமில்லை.

2. பொன்னன் ஊர் மக்களுக்கு நன்மை செய்கிறான்; அவர்களிடம் நலம் விசாரிக்கிறான்; அவர்களோடு இணக்கமாகப் பழகுகிறான்; அவனது உழைப்பில் ஈட்டும் தொகையில் சிறிதளவு பிறருக்கும் கொடுத்து உதவுகிறான். அதனால் தான் அவனை எல்லாரும் மதிக்கிறார்கள்.

3. துறவியிடம் முனியப்பன் தன்னை யாரும் மதிப்பதில்லை என்று குறைபட்டுக் கொண்டான்.

4. பொன்னன் சிறந்த பண்பாளன் என்பதை துறவி, ஊர்மக்களிடம் அவன் காட்டும் அன்பையும் மற்றவருக்கு கொடுக்கும் ஈகை குணத்தையும் உற்று நோக்கிக் கண்டறிந்தார்.

5. கதையின் வாயிலாக நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் இரக்கமும் அன்பும் பிறருக்குக் கொடுக்கும் ஈகை குணமும் ஆகும்.

## 2.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 21)

1. **பதற்றம்** – மாணவர்கள் தேர்வு எழுதும்போது **பதற்றம்** இல்லாமல் எழுத வேண்டும்.

2. **வேடிக்கை** – மக்கள் திருவிழாவில் **வேடிக்கை** பார்த்தனர்

3. **மருத்துவமனை** – உடல்நலமில்லாதவரை **மருத்துவமனை**க்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

## 2.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 22)

A short story is one of the literary forms of prose. A short story should be written in a way that can be read within half an hour. A short story is based on a central theme. It is best if the first line of the short story is designed to arouse the reader's interest.

# பாடம் – 3

## 3.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 25)

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"
2. கணியன் பூங்குன்றனார்
3. உறவினர்
4. இன்பம் வரும்போது மகிழ்ச்சி அடையவும் கூடாது; துன்பம் வரும்போது வெறுக்கவும் கூடாது என்று கணியன் பூங்குன்றனார் கூறுகிறார்.
5. 'ஆற்றிலே மிதந்து செல்லும் சிறு ஓடம்போல, இவ்வுலக உயிர்கள் விதியின் படி செல்லும் இயல்புடையன' என்ற உண்மையை இப் பாடல் அடி உணர்த்துகிறது.

#### ஆ) பின்வரும் தொடர்களில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக. (பக்கம் எண்: 25)

1. தமிழர்களுக்கு
2. சகோதரத்துவச்
3. புறநானூறு
4. குடும்பம்

## 3.3 தெரிந்து கொள்வோம்

### பயிற்சிகள்

#### அ) வினையெச்சத் தொடரை அதற்குரிய படத்துடன் பொருத்துக. (பக்கம் எண்: 28)

| | | |
|---|---|---|
| 1. பால் பொங்கி வழிகிறது | – | படம் – 2 |
| 2. குழந்தை படுத்து உறங்கியது | – | படம் – 4 |
| 3. மாணவர்கள் எழுந்து நின்றார்கள் | – | படம் – 1 |
| 4. பனிக்கூழ் உருகி வழிந்தது | – | படம் – 5 |
| 5. சிறுமிகள் படியிலிருந்து இறங்கி வருகிறார்கள் | – | படம் – 3 |

#### ஆ) படங்களைப் பார்த்து வினையெச்சச் சொற்களை எழுதுக. (பக்கம் எண்: 29)

1. சுமந்து
2. ஓடி
3. பார்க்காமல்

4. கடித்துத்
5. தூங்க
6. நடந்து
7. ஏறிச்
8. பேச

## 3.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைப் படித்து சொற்களைக் கண்டுபிடிக்க. (பக்கம் எண்: 31)

1. குழந்தை
2. நத்தை
3. இலந்தை
4. கழுதை
5. ஆந்தை

## 3.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 32)

1. சரவணன்

2. ஐந்து மணி நேரம்

3. மாட்டுவண்டியில்

4. வண்டிக்காரர் இரவு நேரம் என்று கூடப் பார்க்காமல் வண்டி ஓட்டி வந்ததால் சரவணன் இரக்கப்பட்டான்.

5. இரக்கக்குணம் கொண்டவர் வண்டிக்காரர். அவர் சரவணனுக்கு உதவ வேண்டும் என்று இரக்கப்பட்டதால், நள்ளிரவு என்றும் பார்க்காமல் பாதுகாப்பாக மாட்டுவண்டியில் அழைத்துச் சென்றார்.

## 3.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 33)

1. **உணவு** – இயற்கை **உணவு** சிறந்த உணவாகும்.

2. **உறவினர்** – பள்ளி விடுமுறை நாள்களில் **உறவினர்** வீட்டுக்குச் செல்வோம்.

3. **ஓய்வு** – நான் விளையாடி விட்டு, சிறிது நேரம் வீட்டிற்குச் சென்று **ஓய்வு** எடுத்தேன்.

## 3.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 33)

Humanity is showing love to others. Even smiling at strangers is humanity. We can provide food to the hungry, clothing to the poor, education, etc. Helping others in this way is the sign of humanity.

## 3.10 படைபாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் கதையைப் படித்துத் தொடந்து கூறுக. (பக்கம் எண்: 34)

பொம்மைக்கண்காட்சியைக் காண அம்மாவுடன் செல்கிறாள் மீனா. ஒவ்வொரு கடையிலும் அழகழகான பொம்மைகள். அந்தப் பொம்மை வேண்டும் இந்தப் பொம்மை வேண்டும் என்று அடம்பிடிக்கிறாள் மீனா. அம்மா சமாதானம் செய்கிறாள். ஆனால், மீனா கேட்பதாக இல்லை. அம்மாவின் கையைவிட்டுத் தனியாக ஒரு கடைக்குள் சென்றுவிடுகிறாள். மீனா, மீனா என்று அம்மா கதறுகிறாள். அப்போது. மீனாவின் அருகில் ஒரு பெண் வருகிறாள். **மீனாவும் அம்மாவைக் காணாமல் 'அம்மா அம்மா' என்று அழுகிறாள் அதைக் கண்ட அப்பெண் மீனாவிடம் ஏம்மா அழுகிறாய்? யார் குழந்தை நீ? என்று கேட்டாள். அதற்கு 'மீனா என் அம்மாவுடன் கடைக்கு வந்தேன். இப்பொழுது என் அம்மாவைக் காணோம் என்று அழுதுக்கொண்டே எனக்கு பொம்மை வேண்டாம் அம்மா தான் வேண்டும்' என்று கூறினாள். சரி வா நான் உன் அம்மாவிடம் உன்னைச் சேர்த்து விடுகிறேன் என்று கூறி கடைக்கு வெளியில் நின்று மீனா அம்மா எங்கிருந்தாலும் நான் நிற்கும் கடைக்கு வரவும் என்று சத்தமாகச் சொன்னாள். மீனாவின் அம்மாவும் அவளைத் தேடிக்கொண்டிருந்ததால் இந்த செய்தி கேட்டு உடனே அவ்விடத்திற்கு வந்து மீனாவைக் கட்டிக்கொண்டாள். மீனாவும் 'அம்மா இனிமே நான் அடம் பிடிக்கமாட்டேன். உன் கையையும் விட மாட்டேன்' என்று கூறி அம்மாவின் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். இருவரும் அவர்களைச் சேர்த்து வைத்த அந்த பெண்ணிற்கு நன்றி கூறினர்.**

## 3.11 உயர்நிலைத்திறன்

### பின்வரும் படத்திற்குப் பொருத்தமாக வினாக்கள் உருவாக்குக.

1. ஏன் ஒரு மாணவன் மட்டும் விளையாடாமல் படித்துக் கொண்டிருக்கிறான்?
2. பாண்டியாட்டத்தினை எவ்வாறு விளையாடுவது?
3. கோலிக்குண்டு ஆட்டத்தினை எப்படி ஆடுவது?
4. கோலிக்குண்டு விளையாடுபவர்கள் எங்கு அமர்ந்திருக்கின்றனர்?
5. கயிறு தாண்டுதலை யார் விளையாடுகிறார்கள்?

# பாடம் – 4

## 4.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 38)

1. உலக மக்களிடையே மொழி, இனம், சமயம், பண்பாடு, வாழிடம் எனப் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன.

2. உலக மக்களை விழாக்கள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், விருந்து நிகழ்வுகள், சுற்றுலாக்கள், திரைப்படங்கள் முதலான நிகழ்ச்சிகள் ஒற்றுமைப்படுத்துகின்றன.

3. சுற்றுலா மூலம் ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் பிறநாடுகளுக்கு விரிவடைகின்றன. பிற நாட்டின் தொழில்நுட்பத் திறனைத் தங்கள் நாட்டிலும் பின்பற்ற சுற்றுப்பயணங்கள் உதவுகிறது. இந்தப் பயணங்கள் உலக மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன.

4. மக்களை ஒன்றிணைப்பதில் விளையாட்டுக்கும் பங்கு உண்டு. பல நாட்டு வீரர்கள் இணைந்து ஒற்றுமையாக விளையாடுகின்றனர். எனவே விளையாட்டுகள் மூலம் உலக மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்படுகிறது.

5. இசையை அனுபவிக்க மொழிகள் தேவையில்லை. உலக மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் ஒரே மொழி இசைதான். எனவே இசை, பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கிறது.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? ((X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 38)

1. தவறு
2. தவறு
3. சரி
4. சரி
5. தவறு

### இ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (பக்கம் எண்: 38)

1. கான்பெராவில்
2. இசை
3. சுற்றுப்பயணம்

## 4.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 42)

1. இரவுபகல்
2. செக்கச்செவேலென
3. வாடிவதங்கி

### ஆ) உரைப்பகுதியைப் பொருத்தமான இணைமொழிகளால் நிரப்புக – பக்கம் எண்: 43

1. வாடிவதங்கி
2. கண்ணும் கருத்துமாய்க்
3. இரவுபகல்
4. செக்கச்செவேலெனப்

## 4.4 மொழியோடு விளையாடுவோம்

### படத்திற்குரிய பெயரைக் கண்டறிக. அப்பெயரிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக. (பக்கம் எண்: 42)

1. குதிரை – குதி, திரை, குரை
2. கடிகாரம் – கடி, காரம், கரம்
3. வானவில் – வா, வால், வில்
4. மலைஅருவி – மலை, அருவி, அலை

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 43)

1. அக்டோபர் 31
2. இரும்பு மனிதர்
3. சர்தார் வல்லபாய் படேல்
4. விடுதலை இந்தியாவை ஒருங்கிணைத்தது
5. உறுதியான உள்ளம் கொண்ட மனிதர்

## 4.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 44)

1. Modular Object – Oriented Dynamic Learning Environment
2. மூடுல் தற்போது 100 மொழிகளில் செயலாற்றி வருகிறது.
3. மூடுல் மென்பொருள் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது.
4. மூடுல் மென்பொருள் இணையவழிக் கல்விக்குப் பெரிதும் பயன்படுகிறது.
5. மூடுல் மென்பொருள் 1999ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது.

## 4.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 45)**

1. **கண்காட்சி** – நான் சென்னையில் நடைபெற்ற ஆடை **கண்காட்சி**க்குச் சென்று, விதவிதமான ஆடை வடிவமைப்பைக் கண்டேன்.
2. **சுற்றுலா** – **சுற்றுலா** பொருட்காட்சி அழகாக இருக்கும்.
3. **நட்பு** – திருக்குறளில் **நட்பு** என்ற அதிகாரம் உள்ளது.

## 4.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 22)

கடந்த கால நிகழ்வுகள் ஒவ்வொன்றும் நம் மனதில் ஒரு நினைவாக மாறுகின்றன. இந்த நினைவுகள் காரணமாகவே கடந்த காலத்தில் நடந்த விஷயங்களைப் பற்றி நாம் சிந்திக்க முடிகிறது. நம் வாழ்க்கையில் சில தருணங்கள் உள்ளன, அவற்றை ஒருபோதும் இழக்கக்கூடாது என்று விரும்புகிறோம்.

## 4.11 உயர்நிலைத் திறன்

**நீங்கள் கண்டுகளித்த கண்காட்சி குறித்து உங்கள் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

எண். 4, சித்திரை வீதி,
திருநெல்வேலி.

அன்புள்ள நண்பா,

நான் நலம். நீ நலமா? உன் பெற்றோரின் நலத்தையும் அறிய ஆவல். எங்கள் ஊரில் சென்ற வாரம் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. அதில், பல ஆயிரக் கணக்கான புத்தகங்கள் இருந்தன. என் பெற்றோர் எனக்கு 5 புத்தகங்களை வாங்கித் தந்தனர். அங்கு சிறுவர்கள் விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருட்கள் இருந்தன. நான் அதில் விளையாடி மகிழ்ந்தேன். நீயும் இதனைக் காண வேண்டும் என்று விரும்புகிறேன். உன் வருகையை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

உன் நண்பன்
முல்லைவேந்தன்

பெறுநர் முகவரி
கவின்
எண். 44, தெற்கு ரத வீதி, திருச்செந்தூர்.

# பாடம் – 5

## 5.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) விடை காண்போம். (பக்கம் எண்: 50)**

1. கடிதத்தினை அம்மா பாரதி, மகன் செழியனுக்கு எழுதியுள்ளார்.

2. அம்மா, அப்பா, அக்கா, தாய்மாமன், மகன், மருமகள், தாத்தா, பாட்டி, பேரன்.

3. குடும்ப விழாக்கள், உறவுகளை வலுப்படுத்தவும் இளம் தலைமுறையினர் நமது பண்பாட்டை உணர்ந்து கொள்ளவும் நடத்தப்படுகின்றன. மேலும் உறவுகளோடு மனம் விட்டுப் பேசி இன்பதுன்பங்களைப் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பைக் குடும்ப விழாக்கள் தருகின்றன.

4. செழியனின் அம்மா, தன் பேரனுக்கு வயல்வரப்பு, பசுஞ்சோலை, ஆற்றங்கரை, சந்தை என அனைத்து இடங்களையும் சுற்றிக்காட்டுவதாகக் கூறினார்.

5. வயல்வரப்பு, பசுஞ்சோலை, ஆற்றங்கரை, சந்தை. மண்தரையில் மாட்டுவண்டிப் பயணம், உறவுகளோடு  பாண்டியாட்டம், பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம் ஆடி மகிழ்தல், உறவினர்களோடு மனம்விட்டுப் பேசுதல் என இயற்கையோடு இணைந்த வாழ்வாகக் கிராமத்துச்சூழல் இருக்கும் எனக் கடிதம் குறிப்பிடுகிறது.

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 50)**

1. குடும்ப
2. சென்னை
3. தாய்மாமன்
4. இன்பத்துன்பம்
5. மாட்டுவண்டிப்

## 5.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சி

**அ) கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைந்துச் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என வகைப்படுத்துக. (பக்கம் எண்: 53)**

| வ. எண். | செயப்படுபொருள் குன்றிய வினை | செயப்படுபொருள் குன்றா வினை |
|---|---|---|
| 1. | ஆசிரியர் கொடுத்தார் | அவர் கவிதை எழுதினார் |
| 2. | அன்பு வேகமாக அசைந்தான் | நந்தினி பள்ளத்தில் விழுந்தாள் |
| 3. | கவின் மெதுவாக நடந்தான் | கவிதா உணவு உண்டாள் |
| 4. | கிருஷ்ணன் அழுதான் | வேலன் ஈட்டி எறிந்தான் |
| 5. | ஓவியர் அழகாக வரைந்தார் | ராஜா புத்தாடை உடுத்தினான் |
| 6. | சிவா கீழே உறங்கினான். | அவர் பழம் வாங்கினார் |

### ஆ) செயப்படுபொருள் குன்றா வினைத்தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 53)

1. உண்டான் – கண்ணன் உணவு உண்டான்.
2. படித்தாள் – அனிதா புத்தகம் படித்தாள்.
3. வாங்கினார் – அவர் உடைகள் வாங்கினார்.
4. பாடினார் – ரகு பாடல் பாடினார்.
5. மேய்ந்தது – ஆடு புல்லை மேய்ந்தது.

### இ) செயப்படுபொருள் குன்றிய வினைத்தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 53)

1. மான் – மான் வேகமாக ஓடியது.
2. நடித்தாள் – ராதா நன்றாக நடித்தாள்.
3. சிரித்தனர் – அவர்கள் சத்தமாக சிரித்தனர்.
4. மகிழ்ந்தான் – கண்ணன் மிகவும் மகிழ்ந்தான்.
5. பறந்தன – பறவைகள் வேகமாக பறந்தன.

## 5.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புணர்த்தும் சொல்லை முதல் எழுத்தை மாற்றிக் கண்டறிக. (பக்கம் எண்: 54)

1. தவளை
2. பொருள்
3. பூக்கள்
4. படம்
5. இறகு

## 5.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் – பக்கம் எண்: 55

1. விடிந்தால் புத்தாண்டு, அதனால் கமலா பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

2. கமலாவின் குழந்தைகள் வீடு முழுக்கத் தாள்களைக் கிழித்துப் போட்டுக்கொண்டு இருந்தார்கள்.

3. அட்டைப்பெட்டிக்குள் குருவிக்கூடு. அதில் தாய்ப்பறவை உணவூட்ட குஞ்சுகள் உண்பதுபோல சிறுசிறு துண்டுத்தாள்களைக் கொண்டு ஒட்டப்பட்ட படம் இருந்தது.

4. தாய்ப்பறவை உணவூட்ட, பறவைக் குஞ்சுகள் உணவு உண்பதுபோல சிறுசிறு துண்டுத்தாள்களைக் கொண்டு ஒட்டப்பட்ட படத்துடன் அழகிய குருவிக்கூடு தாய் அன்பை விளக்குவதாக இருந்தது அதன் சிறப்பாகும்.

5. புத்தாண்டு பரிசு அல்லது தாய் உள்ளம்.

## 5.7 செந்தமிழ்ச்செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 56)**

1. **அன்பு** – நான் என் பெற்றோரின்மீது **அன்பு** கொண்டுள்ளேன்.
2. **உறவினர்** – நாங்கள் விடுமுறை நாள்களில் **உறவினர்** வீட்டுக்குச் செல்வோம்.
3. **திருவிழா** – எங்கள் ஊரில் **திருவிழா** சிறப்பாக நடைபெறும்.

## 5.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 56)

Love is powerful. Love can conquer anything. Those who love cannot hide it. The tears that flow from his eyes will reveal how much he loves us.

## 5.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் கோடிட்ட இடங்களில் உம் கற்பனைக்கேற்பச் சொற்களை நிரப்புக. (பக்கம் எண்: 57)**

எறும்பைப் போலச் சுறுசுறுப்பாக
நாம் இருக்கப் பழகுவோம்
யானை போலக் கூட்டமாக
நாம் வாழப் பழகுவோம்
புலியைப் போல **பாய்வதற்கு**
**நாம் கற்றுக் கொள்வோம்**
பசுவைப் போல **சாதுவாக**
**நாம் இருக்க பழகுவோம்**
**நாயைப் போல நன்றியுடன்**
**நாம் வாழப் பழகுவோம்**
**காகத்தைப் போல பகிர்ந்துண்ண**
**நாம் பழகுவோம்**

## 5.11 உயர் நிலைத்திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியில் விடுபட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை நிரப்புக. (பக்கம் எண்: 57)**

தை மாதம் முதல் நாள் **பொங்கல்** விழா கொண்டாடப்படுகிறது. இது தமிழர் திருநாள் எனவும், **தைத்திருநாள்** எனவும் அழைக்கப்படுகிறது. இவ்விழா **தமிழரின்** உயர்வை உணர்த்துகிறது. இயற்கையை வணங்கும் வகையில் **சூரியனுக்குப்** பொங்கல் படைத்துக் கொண்டாடுவர். இரண்டாம் நாள் **மாட்டுப் பொங்கல்**. அன்று மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு **வண்ணம்** தீட்டுவர். மூன்றாம் நாள் காணும் பொங்கல். அன்று பெரியவர்களைக் கண்டு அவர்களிடம் **வாழ்த்து** பெறுவர்.

# பாடம் – 6

## 6.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) விடை காண்போம். (பக்கம் எண்: 62)**

1. கமலி, தன் அம்மாவுடன் கடைக்குச் சென்றாள்.
2. சமுதாய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தரும் செயல்களைச் சமூகப்பொறுப்பு என்கிறோம்.
3. நீரைச் சேமிப்பது, அவசர கால ஊர்திக்கு வழிவிடுவது, குப்பையைச் சரியான குப்பைத் தொட்டியில் கொட்டுவது ஆகியவை கமலி அறிந்துகொண்ட சமூகப்பொறுப்புகள் ஆகும்.
4. மண்ணோடு மண்ணாக மட்கிப் போகும் பொருள் மட்கும் பொருள்கள் எனப்படும். அதாவது காய்கறிக்கழிவு, அழுகிய பழங்கள் போன்றவை மட்கும் பொருள்களாகும்.

   மண்ணில் மட்கிப் போகாத பொருள்கள் எல்லாம் மட்காத பொருள்கள் எனப்படும். அதாவது நெகிழியாலான பொருள்கள் எல்லாம் மட்காத பொருள்களாகும்.
5. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருத்தல், சட்டத்தைப் பின்பற்றுதல்

**ஆ) கீழ்க்காணும் வினாக்கள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 62)**

1. தவறு
2. சரி
3. சரி
4. தவறு
5. தவறு

**இ) பின்வரும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 62)**

1. ஊர்வலம்
2. சமூகப்பொறுப்பு
3. சமுதாய வளர்ச்சிக்கு
4. உயிர் காக்கும்
5. மட்கும்

## 6.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

**அ) படக்காட்சியைக் கண்டு, நிறுத்தக்குறியுடன் கூடிய தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 65)**

1. காட்டில் பல விலங்குகள் வாழ்கின்றன.
2. காட்டில் எத்தனை வகை விலங்கினங்கள் உள்ளன?
3. ஆற்றங்கரையில் மான்கள், செம்மறி ஆடுகள், நீர்யானை, குதிரைகள், நரிகள், ஒட்டகச்சிவிங்கிகள் முதலான விலங்குகள் இருந்தன.

**ஆ) கீழ்க்காணும் தொடர்களில் உரிய நிறுத்தற்குறிகளை இடுக. (பக்கம் எண்: 65)**

1. நந்தினி, வனிதாவிடம் இன்று மாலை விளையாட வருவாயா? என்று கேட்டாள்.
2. பேரறிஞர் அண்ணாவின் 'செவ்வாழை' என்னும் சிறுகதை குறிப்பிடத்தக்கது.
3. நாளை பள்ளி விடுமுறையா?
4. ஆ! பாம்பு பாம்பு.

**இ) பொருத்துக. (பக்கம் எண்: 65)**

1. காற்புள்ளி – ,
2. அரைப்புள்ளி – ;
3. முற்றுப்புள்ளி – .
4. முக்காற்புள்ளி – :
5. வியப்புக்குறி – !
6. வினாக்குறி – ?

## 6.4 மொழியோடு விளையாடுவோம்

**ஒரே ஓசையில் முடியும் சொற்களைக் கொண்டு தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 66)**

1. காலை, காளை
   உழவன் **காலை**யில் எழுந்தவுடன் **காளை**யைக் காணாமல் திகைத்தான்.

2. மலை, மழை
   குமணன் **மலை** மீது ஏறும்போது **மழை** பெய்தது.

3. வலை, வளை
   எலி **வலை**யில் மாட்டாமல் **வளை**ந்து சென்றது.

4. இளை, இழை, இலை
குமணன் வாடி **இளை**த்த செடியில் உள்ள **இலை**யை **இழை** இழையாகக் கிழித்தான்.

5. பனி, பணி
உழவர்கள் மார்கழி **பனி**யில் **பணி** செய்தனர்.

6. எரி, எறி
குப்பையை **எரி**த்து, அதன் சாம்பலைத் தூக்கி **எறி**ந்தான்.

7. கலை, களை
**கலை**கள் கற்றுக் குற்றங்களைக் **களை**வோம்.

## 6.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 67)

1. முதியவர் இதயநோயால் துன்பப்பட்டார்.
2. முதியவரின் மகன் மருத்துவரிடம் தனது தந்தைக்கு குலுக்கல் சீட்டில் முதற்பரிசு விழுந்திருக்கிறது என்று கூறினார்.
3. ஒரு கோடி
4. குலுக்கல் பரிசில் பாதி தொகையினை முதியவர் மருத்துவருக்குத் தருவதாகக் கூறினார்.
5. பரிசில் பாதித்தொகையைத் தருவதாகக் கூறிய முதியவரின் சொல்லைக் கேட்டு மருத்துவர் மயங்கி விழுந்தார்.

## 6.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 68)

| | | | |
|---|---|---|---|
| 1. | **அவசர கால ஊர்தி** | – | சாலையில் **அவசர கால ஊர்தி**க்கு வழிவிட வேண்டும். |
| 2. | **விழிப்புணர்வு** | – | மக்களிடம் சாலை **விழிப்புணர்வு** ஏற்படுத்த வேண்டும். |
| 3. | **ஒத்துழைப்பு** | – | காவலர்களுக்கு **ஒத்துழைப்பு** அளிக்க வேண்டும். |

## 6.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 68)

The role of youth in social progress is very important. The youth of today are the foundation of the future society. Therefore, We must develop qualities like a giving attitude, tolerance and public welfare.

## 6.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் பாதிக்கதையைப் படித்து, மீதிக்கதையை எழுதுக. (பக்கம் எண்: 69)

முருகனும் குமரனும் பள்ளிக்குச் செல்கின்றனர். வழியில் பணப்பை ஒன்று இருப்பதை முருகன் பார்க்கிறான். உடனே அதைக் கையில் எடுக்கிறான். அப்போது குமரன், யாரோ தொலைத்துவிட்டார்கள் போலும். வா, அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிடலாம் என்று கூறுகிறான். ஆனால் முருகன் வேண்டாம் நாமே வைத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறான். அதற்கு, பணத்தைத் தொலைத்தவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்திருப்பார்கள். அதனால் மிகவும் வருத்தப்படுவார்கள். எனவே, இப்பணத்தைத் தொலைத்தவர்களிடமே கொடுத்துவிடலாம் என்று குமரன் கூறியதை முருகனும் ஏற்றான். இருவருமே அப்பணத்தைக் காவலரிடம் ஒப்படைத்தனர். காவலர் அந்தப் பணத்தை உரியவரிடம் சேர்த்தார். காவலர் குமரனையும் முருகனையும் பாராட்டினார். பணத்தைப் பெற்றவர் இருவருக்கும் வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்தார்.

## 6.11 உயர்நிலைத்திறன்

### குறிப்புகளை விரித்து, உரைப்பகுதி உருவாக்குக. (பக்கம் எண்: 69)

வயதான உழவர் ஒருவருக்கு நான்கு மகன்கள். அவர்கள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பர். அதைக்கண்டு உழவர் வருத்தம் அடைந்தார். அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தார். குச்சிகளை இணைத்து ஒரு கட்டாகக் கட்டினார். தனது மகன்களை அழைத்து, ஒவ்வொருவரையும் தனிதனியாக அழைத்து அந்தக் கட்டை உடைக்கச் செய்தார். ஒருவராலும் அந்தக் கட்டை உடைக்க முடியவில்லை. கட்டிலிருந்து ஒரு குச்சியை மட்டும் எடுத்து, அவர்களிடம் கொடுத்து உடைக்க சொன்னார். அக்குச்சியை எளிதாக உடைத்தனர். தனித்தனியாக இருந்தால் நம்மை யாராவது எளிதில் வீழ்த்தி விடுவார்கள். ஆனால் நால்வரும் ஒற்றுமையாக இருந்தாலும் யாராலும் எளிதில் நம்மை வெல்ல முடியாது என்று மகன்களுக்கு அறிவுரை வழங்கினார். நால்வரும் அதனைப் புரிந்துகொண்டு, சண்டையிடாமல் ஒற்றுமையுடன் இருப்பதாகக் கூறினர்.

# பாடம் – 7

## 7.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 73)

1. கழிவுகளைக் கொட்டி மண்வளத்தைக் கெடுத்தல், நீர்நிலைகள், காடுகள் முதலியவற்றை ஆக்கிரமிப்பு செய்தல், குப்பைகள், நெகிழிப்பைகள் போன்றவற்றை எரித்தல், மிகுதியான வெடிபொருள்களை வெடித்தல், புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குதல், மிகுதியான ஊர்தியைப் பயன்படுத்துதல் போன்றன மனிதர்களால் புவிக்கு ஏற்படும் பாதிப்புகள் ஆகும்.

2. மரங்கள் கரியமிலவாயுவை (கார்பன்டை ஆக்ஸைடு) உள்ளே இழுத்துக்கொண்டு உயிர்க்காற்றை (ஆக்சிஜன்) வெளிவிடுகின்றன.

3. புவி வெப்பமடைதலால் ஏற்படும் தீங்குகளாவன: காலநிலை மாற்றம், பெருமழை, வறட்சி, காட்டுத்தீ என இவையெல்லாம் புவி வெப்பமடைதலால் உருவாகின்றன. மேலும் காலநிலை மாற்றத்தால் பனிமலைகள் உருகுகின்றன. உருகிய பனியானது, ஆறுகளின் வழியே கடலில் அதிக அளவில் சேர்கிறது. இதனால் கடல் மட்டம் உயர்ந்து கரையோர நகரங்கள் மூழ்கும் நிலை ஏற்படுகிறது.

4. புவிநாள் ஏப்ரல் 22 அன்று கொண்டாடப்படுகிறது.

5. குப்பைகள், நெகிழிப்பைகள் போன்றவற்றை எரித்தல், வெடிபொருள்களை வெடித்தல், புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குதல், மிகுதியான ஊர்தியைப் பயன்படுத்துதல் போன்றவற்றால் காற்று மாசுபடுகிறது.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (பக்கம் எண்: 73)

1. ஆ) காற்று
2. இ) வாகனப் புகை
3. அ) காலநிலை மாற்றம்

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 73)

1. ஏப்ரல்
2. புவி வெப்பமடைதல்
3. குளோரோ புளோரோ கார்பன்
4. மரம்
5. ஓசோன் படலம்

ஈ) இரு படத்தையும் ஒப்பிட்டு, மூன்று தொடர் எழுதுக. (பக்கம் எண்: 73)

1. காட்டை அழிக்கக் கூடாது.
2. மரம் நட வேண்டும்.
3. மரம் வளர்த்து புவியைக் காப்போம்.

## 7.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சி

அ) கொடுக்கப்பட்ட சொல்லிற்குரிய படத்தினைத் தேர்வு செய்க. (பக்கம் எண்: 75)

1. கார் – மேகம் (படம்–1)
2. தரணி – உலகம் (படம்–3)
3. வனம் – காடு (படம்–2)

## 7.4 மொழியோடு விளையாடுவோம்

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக. (பக்கம் எண்: 76)

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 1. இடி<br>2. பலா<br>3. கனை<br>6. மதி<br>7. ஆசை | 5. திரை |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. இமயமலை<br>2. பனை<br>3. கரை<br>4. ஆலமரம்<br>5. திராட்சை | 5. தினை |

## கருத்து விளக்கப்படம்

வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 77)

1. ஜூன் 21
2. உடல், மனம்
3. யோகாப் பயிற்சி
4. உலக அமைதிக்காகச் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.
5. தமிழ்ப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானம், தஞ்சாவூர்.

## 7.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 77)

1. கிரேட்டா துன்பர்க் (Greta Thunberg)
2. பருவநிலை காக்கப் பள்ளி வேலைநிறுத்தம் (School Strike for the Climate)
3. எதிர்காலத்திற்கான வெள்ளி (Fridays for Future)
4. ஐக்கிய நாடுகள் சபையில் கிரேட்டா துன்பர்க் பருவநிலை மாற்றம் என்பது குறித்து பேசினார்.
5. கிரேட்டா துன்பர்க் தற்போது, பல நகரங்களுக்குச் சென்று பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

## 7.7 செந்தமிழ்ச்செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 79)

1. **காலநிலை மாற்றம்**
   புவி வெப்பமடைவதால் **காலநிலை மாற்றம்** ஏற்படுகிறது.

2. **இயற்கை வளம்**
   **இயற்கை வளம்** பாதுகாக்கப்பட வேண்டுமெனில் மரங்களை வளர்க்க வேண்டும்.

3. **காடுகள் வளர்த்தல்**
   மக்களிடம் **காடுகள் வளர்த்தல்** குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

## 7.8 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 79)

பூமியில் பல வகையான பூச்சிகள் உள்ளன. சில வகைகள் மனிதனுக்கு பயனுள்ளதாக இருக்கும். தேனீக்களிடமிருந்து தேனும் மெழுகும் நமக்குக் கிடைக்கின்றன. பட்டுப்புழுக்களிலிருந்து பட்டு நமக்குக் கிடைக்கிறது.

## 7.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**படத்திற்குப் பொருத்தமாக ஐந்து வருணனைத் தொடர் உருவாக்குக.**

எ.கா: மரங்கள் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தன.

1. நீர் அருவியிலிருந்து நீர் கொட்டுகிறது.
2. மரங்கள், செடிகள் அடர்ந்து காணப்படுகின்றன.
3. நீர் சலசலவெனப் பெருக்கெடுத்து ஆறாக ஓடுகிறது.
4. மலையும் காடும் சேர்ந்த இந்த இடம் குறிஞ்சி என்று அழைக்கப்படும்.
5. இயற்கை எழில் கொஞ்சும் காட்சி.

## 7.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து உமது கருத்துகளைச் சொந்த நடையில் கூறுக.**

எடுத்துக்காட்டு.

சுற்றுச்சூழலை காத்து, எல்லாரும் சுகமாய் வாழ வழிவிட்டு, சொந்தப்பந்தம் அனைவரும் சேர்ந்து கூடி வாழ, சுறுசுறுப்பாய் கடமைகளை செய்ய வேண்டும். காட்டை அழிய விடாமல் பாதுகாத்து, காற்றை மாசடைய செய்யாமல் பாதுகாக்க வேண்டும். மரங்களை வளர்த்து, காகம், குருவி போன்ற பறவையினங்களையும் பாதுகாக்க வேண்டும். இவ்வனைத்தையும் காலம் கடத்தாமல் செயல்படுத்த வேண்டும்.

# பாடம் – 8

## 8.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 83)

1. இயந்திரங்கள், வேதியியல் பொருள்கள் போன்றவற்றின் உதவியில்லாமல் இயற்கையாகச் செய்யப்படும் வேளாண்முறையை 'இயற்கை உழவு முறை' என்பர்.

2. நம்மாழ்வார், வேம்பு, மஞ்சள் உள்ளிட்ட மருத்துவப் பொருள்களுக்குக் காப்புரிமை பெற்றுக்கொடுத்தார்.

3. வான்காரி மாத்தாய், "பசுமைப் பட்டை" என்ற இயக்கத்தைத் தொடங்கி, ஆப்பிரிக்க காடுகளை மீட்டெடுத்தார். 'மரங்களின் தாய்' என்று அழைக்கப்பட்ட இவர் காடுகள் அழிப்பினால் ஏற்பட்ட வறுமையை ஒழிக்க, ஓர் அமைப்பைத் தொடங்கி பெண்களின் உதவியுடன் முப்பது ஆண்டில், மூன்று கோடி மரம் நட்டுள்ளார். சுற்றுச்சூழலை மேம்படுத்துவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டார்.

4. ரேச்சல் லூயிஸ் கார்சன் எழுதிய 'மௌன வசந்தம்' என்னும் நூல் மிகவும் புகழ்பெற்றது. இந்நூல், அமெரிக்காவின் தேசிய பூச்சிக்கொல்லிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏராளமான மக்களைச் சுற்றுச்சூழல் பாதுகாவலர்களாக மாற்றிய பெருமை இந்நூலுக்கு உண்டு. இந்நூல் பூச்சிக்கொல்லி வேதிப் பொருள்களுக்குத் தடைவிதிக்க வழிவகுத்தது.

5. நம்மாழ்வார், வேளாண்மையில் இயற்கை முறைக்கு முதன்மை அளித்தவர். இந்திய மரபுவிதைகளை மீட்டெடுத்து, மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார். குடும்பம், லிசா, வானகம் போன்ற சூழலியல் அமைப்புகளை உருவாக்கி இயற்கை, மரபு விவசாயம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார்.

   ராஜேந்திர சிங், நீர் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை சார்ந்த முயற்சிகளில் முன்னோடியாக இருந்தார். நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலரான இவர், "இந்தியாவின் நீர்மனிதன்" என்று அழைக்கப்பட்டார்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 84)

1. இ) வானகம்
2. ஆ) வான்காரி மாத்தாய்
3. ஈ) சுதந்திர விருது

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 84)**

1. ஒற்றை வைக்கோல் புரட்சி
2. நம்மாழ்வார்
3. வான்காரி மாத்தாய்
4. ரேச்சல் லூயிஸ் கார்சன்
5. ஆப்பிரிக்கக் காடுகள்

**ஈ) பொருத்துக. (பக்கம் எண்: 84)**

1. ரேச்சல் கார்சன் – மௌன வசந்தம்
2. நம்மாழ்வார் – வானகம்
3. வான்காரி மாத்தாய் – பசுமைப்பட்டை
4. மசானபு ஃபுகோகா – ஒற்றை வைக்கோல் புரட்சி

**உ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக (பக்கம் எண்: 84)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

## 8.3 மொழிக்கூறு

**பயிற்சிகள்**

**அ) கீழ்க்காணும் மரபுத்தொடர்களுக்கு ஏற்ப தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 86)**

1. **பஞ்சாகப் பறத்தல்**

   அன்பு நூலகத்தில் உள்ள புத்தகத்தை தேடப் **பஞ்சாகப் பறந்து** கொண்டிருந்தான்.

2. **தட்டிக் கழித்தல்**

   ரவி கிடைத்த வாய்ப்பைத் **தட்டிக் கழித்தான்**.

3. **வெட்டிப்பேச்சு**

   வேலை செய்யும் போது **வெட்டிப்பேச்சு** பேச வேண்டாம்.

**ஆ) பின்வரும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 86)**

1. பஞ்சாகப் பறந்தான்
2. தட்டிக் கழித்தாள்
3. வெட்டிப்பேச்சு

இ) பொருத்துக. (பக்கம் எண்: 86)

1. பஞ்சாகப் பறத்தல் – அலைந்து திரிதல்
2. தட்டிக் கழித்தல் – சாக்குபோக்கு சொல்லுதல்
3. வெட்டிப்பேச்சு – வீண்பேச்சு

## 8.4 மொழியோடு விளையாடுவோம்

நான்கு சொல்லுக்கும் பொருந்தும் ஓரெழுத்தைக் கண்டறிக. (பக்கம் எண்: 86)

1. கா – காகிதம், காய், காசு, காகம்
2. து – சதுரம், மதுரை, முதுமை, புதுமை
3. ஞ் – பஞ்சு, மஞ்சள், இஞ்சி, அஞ்சு
4. ழ் – தமிழ், வாழ், யாழ், இதழ்

## 8.5 கேட்டல் கருத்தறிதல்

வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 87)

1. பறவையினம்
2. பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தின் சிறப்புச் செயலாளர் மில்லர்ட்.
3. சலீம் அலி, மில்லர்ட்டிடம் பறவைகளை எவ்வாறு அறிந்துகொள்வது, எப்படி பாதுகாப்பது போன்ற விவரங்களைக் கற்றுக்கொண்டார்.
4. சலீம் அலி மக்களால் "பறவைகளைப் பற்றிய நடமாடும் கலைக்களஞ்சியம்" என்று அழைக்கப்பட்டார்.
5. இந்திய அரசு, சலீம் அலியைப் பாராட்டி, அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## 8.7 செந்தமிழ்ச்செல்வம்

சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 89)

1. **புத்துணர்வு**
   விளையாட்டுப் பயிற்சி மேற்கொண்டால் உடலுக்கும் உள்ளத்துக்கும் **புத்துணர்வு** ஏற்படும்.
2. **வாழ்நாள்**
   நாம் **வாழ்நாள்** முழுவதும் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.
3. **மக்கள்**
   **மக்கள்** இயற்கையை நேசித்து போற்ற வேண்டும்.

4. **பாதுகாப்பு**
   இயற்கை வளங்கள் **பாதுகாப்பு** பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

## 8.8 மொழிபெயர்ப்போம் ( பக்கம் எண்: 89)

Protecting nature is the duty of the people. Today, all the countries of the world are paying more attention to protecting nature. The International Union for Conservation of Nature was formed to protect the world's natural resources.

## 8.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்திப் படத்திற்குப் பொருத்தமாக ஐந்து தொடர் உருவாக்குக. பக்கம் எண்: 90**

1. மழை நீர் **சலசல**வென பெருக்கெடுத்து ஓடுகிறது.
2. வானத்தில் **பளபள**வென மின்னல் வெட்டியது.
3. மரங்கள் **மடமட**வென்று சரிய தொடங்கியது.
4. மரத்தின் கிளைகள் **சடசட**வென ஒடிந்து விழுந்தது.
5. காற்றினால் வீட்டின் மேற்கூறைகள் **படபட**வென அடித்துக் கொண்டிருந்தன.

## 8.11 உயர்நிலைத்திறன்

**சுற்றுலா செல்வதற்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமைப்படுத்திக் கூறுக. பக்கம் எண்: 90**

எங்கள் பள்ளியில் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அதில் நாற்பது மாணவர்களும், ஐந்து ஆசிரியர்களும் மூன்று நாள் பேருந்து பயணமாகச் சென்றோம். முதல் நாள் உயிரியல் பூங்கா, கடற்கரை துறைமுகம் சென்றோம். அங்கே கடற்கரை மணலில் விளையாடினோம். இரண்டாம் நாள் அருங்காட்சியகத்திற்குச் சென்று அங்குள்ள பழங்கால பொருட்களைக் கண்டோம். அதன் பிறகு மலர்க்கண்காட்சிக்குச் சென்று அங்குள்ள விதவிதமான மலர்களைக் கண்டு, அதன் அழகை ரசித்தோம். மூன்றாம் நாள் மகிழுந்து தயாரிப்புத் தொழிற்சாலைக்குச் சென்று மகிழுந்துக்கான பாகங்கள் தயாரிக்கும் முறைகள், அப்பாகங்களை ஒன்று சேர்த்து மகிழுந்து உருவாக்கும் விதம் முதலானவற்றைப் பார்வையிட்டு தெரிந்துகொண்டோம். அதன்பிறகு, நூலகத்திற்குச் சென்றோம். அங்கு அரிய நூல்களையும், பல மொழி நூல்களையும் அறிந்துகொண்டோம். அனைத்தையும் கண்டு மகிழ்ச்சியாகக் கொண்டாடி, இறுதியில் பள்ளிக்கு திரும்பினோம்.

# மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (பக்கம் எண்: 91)**

1. ஷெல்லி
2. புறநானூறு
3. செயப்படுபொருள் குன்றா வினை
4. புவி
5. ரேச்சல் லூயிஸ் கார்சன்

**2) பொருத்துக. (பக்கம் எண்: 91)**

1. மஞ்சு – மேகம்
2. ஆழி – மோதிரம்
3. கார் – கருமை
4. பொழிவு – அழகு
5. வையம் – உலகம்

**3) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 91)**

1. சரி
2. தவறு
3. தவறு
4. சரி
5. சரி

**4) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்:92)**

1. புவி வெப்பமயமாதலைத் தடுக்க மரங்கள் நட வேண்டும்.
2. ஒரு சொல் அல்லது சொற்றொடர், அதன் நேரடிப் பொருளைத் தராமல், வழக்கில் வேறு ஒரு பொருளைக் குறிக்கும்போது, அதை மரபுத்தொடர் என்பர்.

   சான்று : தேவைக்கு மேல் செலவுகள் செய்தால் உண்ணும் உணவிற்கே **தாளம் போட** வேண்டியதாக இருக்கும்.

   முருகன் அவசர வேலையாக வீட்டிலிருந்து **பஞ்சாய் பறந்து** விட்டான்.

3. பாரதியார் அடிமைகளாக இருந்த மக்களிடத்தில் விடுதலை உணர்வை ஊட்டினார். அவர்களை அடிமை வாழ்விலிருந்து மீண்டு எழச் செய்தார்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்

என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

என்ற பாடல் வரியின் மூலம் இவரின் விடுதலை வேட்கையை உணரலாம்.

4. வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். வினையெச்சம், தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் என நான்கு வகைப்படும்.

5. இணைமொழிகளை செறியிணை, நேரிணை, எதிரிணை என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

செறியிணை: ஒரு பொருளின் பண்பு அல்லது செயலைக் குறிப்பது செறியிணை மொழி.
சான்று: செவ்வாழை செக்கச்செவேலெனச் சிவந்துள்ளது.

நேரிணை: ஒரே பொருள் தரும் இரு சொல் இணைந்து வருவது நேரிணை மொழி.
சான்று: வயலில் பயிர்கள் நீரின்றி வாடிவதங்கிக் காய்கின்றன.

எதிரிணை: ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு சொல் இணைந்து வருவது எதிரிணை மொழி.
சான்று: முருகன் இரவுபகல் பாராது ஓய்வின்றி உழைத்தான்.

### 5) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுக. (பக்கம் எண்: 91)

1. நூலகம்
2. ஆந்தை
3. தவளை, தேரை, நண்டு முதலியனவாகும்.
4. இமயமலை
5. பொங்கல்

### 6) கீழ்க்காணும் கதையைப் படித்துத் தேவையான இடத்தில் சரியான நிறுத்தக்குறிகளைக் கொண்டு நிரப்புக. ( பக்கம் எண்: 92)

மரவெட்டிகள் இருவர் காட்டிற்குச் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும்போது ஒருவனிடத்தில் அதிக விறகும் மேலும், அவன் அதிக களைப்படையாமலும் இருந்தான். அவனைப் பார்த்த மற்றொருவனுக்கோ பெரும் வியப்பு. நம்மைப் போலதானே அவனும். அவனால் மட்டும் எப்படி இது முடிந்தது என்று, ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டுவிட்டான், ' இந்த விறகுகளுக்காக நீ

என்ன செய்தாய்?' என்று ஒருவன் கேட்டான். அதற்கு மற்றொருவன், 'இடைவிடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன்' என்று சொன்னான். 'சிறிதும் ஓய்வு இல்லாமலா' என்று கேட்டான். 'ஆம். அதிக விறகுகள் பெற வேண்டுமே! ஆனால் நீ மட்டும் கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி?' என்று கேட்டான். 'நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன்' என்று சொன்னான் நண்பன். மறுநாள் அவனும் அதேபோல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான், இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்ட முடியவில்லை, மறுநாள் மரம் வெட்டப் பிரிந்து சென்றபின், அவன் நண்பனைப் பின்தொடர்ந்து சென்றான். நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டிவிட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால், அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாரியைத் தீட்டிக் கொண்டிருந்தான்.

**7) கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சொற்களை நிரப்புக. (பக்கம் எண்: 92)**

1. உலகு
2. அணிகலம்
3. தன்மகனைச்
4. ஊன்றிய
5. பேதைமை

**8) பொருத்துக. (பக்கம் எண்: 92)**

1. வந்த எழிலன் – தெரிநிலைப் பெயரெச்சம்
2. நல்ல புத்தகம் – குறிப்புப் பெயரெச்சம்
3. ஓடாத வண்டி – எதிர்மறைப் பெயரெச்சம்
4. படிக்கச் சென்றான் – தெரிநிலை வினையெச்சம்
5. வலியப் பேசினான் – குறிப்பு வினையெச்சம்

**9) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக. (பக்கம் எண்: 93)**

1. Mother tongue – தாய்மொழி
2. Poetry – கவிதை
3. Peace – அமைதி
4. Idea – எண்ணம் / யோசனை
5. Ignorance – அறியாமை
6. Unity – ஒற்றுமை
7. Residence – வாழிடம்
8. Culture – கலாச்சாரம்
9. Global Warming – உலக வெப்பமயமாதல்
10. Ecologist – சூழலியலாளர்

**10) கீழ்க்காணும் பழமொழிகளை நிரப்புக. (பக்கம் எண்: 93)**

1. தெரியும்
2. கல்லும்
3. சுற்றம்
4. அமைதி
5. கடலினும்

**11) கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுக. (பக்கம் எண்: 93)**

1. அகிலன்
